9-25 மணி

உயர்நீதிமன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்து தடையாணை பிறப்பிக்கப்பட்டது. இப்போது அது ரத்து செய்யப்பட்டு இருக்கிறது. நிலத்தை கையகப்படுத்துவதற்கான தனி அதிகாரி நியமனம் செய்யப்பட்டிருக்கிறது. விரைவாக அந்தப் பணியைத் துவங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு அந்தப்பணி விரைவாகத் துவங்கப்படும்.

திரு. சா. கணேசன் : தலைவர் அவர்களே, நிலத்தைக் கையகப்படுத்தும் திட்டம் கூட முடிவான வகையில் அவார்டு பாஸ் செய்யப்பட்டிருப்பதாக அறிகிறேன். எனவே, விரைவில் தொடர்ந்து பணியினை முடிக்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : தலைவர் அவர்களே, ஏறத்தாழ 10 பணிகள் அவார்டு செய்யப்பட்டன. அதிலே மீண்டும் 9 பணிகள் அவார்டு பண்ணாமல் இருந்தன. அது உயர்நீதிமன்றத் தடையின் காரணமாகத் தவிர்க்கப்பட்டு இருந்தது. இப்போது முடிவுற்று கையகப்படுத்துகின்ற நிலையில் இருக்கிறது. அந்த அதிகாரி கையகப்படுத்தி மாநகராட்சிக்குக் கொடுப்பாரேயானால் உடனடியாக இந்தப் பணியைத் துவங்குவதற்கு திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பணி துவங்கப்படும்.

வீரிய விதைகள் விநியோகம்.

*8349—திரு. மெ. ஆண்டி அம்பலம் :

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மானிய விலையில் அரசு வழங்கும் நெல் உட்பட உணவு தானிய வீரிய விதைகளை அரசு விவசாய (தாலுகா) கிடங்குகளிலிருந்து வழங்க முன்வருமா ?

(ஆ) ஏற்கெனவே உள்ள முறையில் குறைபாடுகளைக் களைய நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மானிய விலையில் அரசு வழங்கும் நெல் மற்றும் ஏனைய இடு பொருள்கள் வேளாண்மைத் துறையின் கட்டுப்பாட்டில் இயங்கும் 780 வேளாண்மை விரிவாக்க மையங்கள் மூலம் ஏற்கெனவே விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. வருங்காலத்திலும் அவ்வாறே தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

1990 மே 11]

(ஆ) குறைகள் காணப்படின் அவற்றைக் களைய தகுந்த நடவடிக்கை உடனடியாக எடுக்கப்படும்.

திரு. மெ. ஆண்டி அம்பலம்: பேரவைத் தலைவர் அவர்களே, வீரிய விதை கண்டுபிடிப்பு சம்பந்தமாக அரசு ஏதேனும் நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் நம்முடைய கோவை வேளாண்மை பல்கலைக் கழகத்தில் ஒவ்வொரு ஆண்டும் வீரிய வித்துக்கள் கண்டுபிடிக்கப்பட்டு அது ஒவ்வொரு ஆண்டும் அறிவிக்கப்பட்டு பிறகு மத்திய அரசுக்கு அனுப்பி அவர்களுடைய ஒப்புதலைப் பெற்று அப்படிப்பட்ட நல்ல முயற்சியை நம்முடைய தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் மேற்கொண்டு வருகிறது.

திரு. மெ. ஆண்டி அம்பலம்: தலைவர் அவர்களே, கோயம்புத்தூரிலே ஜி.டி. நாயுடு அவர்கள் ஒரு வெள்ளைச் சோளக் கதிரிலே 2 கதிர் 3 கதிர் கூட விவசாயத்தின் மூலமாகத் தயார் செய்தார்கள். அந்த அடிப்படையிலே நமது அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வது, அந்த விதை எல்லாம் ஏழை விவசாயிகளுக்குக் குறைந்த விலையிலே உரிய காலத்தில் கிடைப்பது இல்லை. நெல் எல்லாம் விற்ற பிறகு கிடைக்கிறது. அதை கவனத்திலே கொண்டு நம்முடைய அமைச்சர் அவர்கள் அது குறுகிய காலத்திலே கிடைப்பதற்கு ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: பேரவைத் தலைவர் அவர்களே, புதிய ரக விதைகள் கண்டு பிடிக்கப்பட்ட பிறகு நம்முடைய வேளாண்மைப் பண்ணைகளில் நாம் உற்பத்தி செய்து அதன் பிறகு சான்றுகள் அளிக்கப்பட்ட விவசாயிகளிடத்திலே அந்த விதையைத் தந்து அவர்களிடமிருந்து கொள்முதல் செய்த பிறகு பரவலாக விவசாயிகளுக்கு இந்த வீரிய வித்துக்கள், இடுபொருள்கள் வழங்கப்படுகின்றன. ஆகவே, ஓராண்டு ஈராண்டு, மூன்றாண்டுக் காலம் கூட பரவலாக எல்லா விவசாயிகளுக்கும் புதிய கண்டுபிடிக்கப்பட்ட விதைகள் சென்றடைய காலதாமதம் ஏற்படுகிறது.

திரு. கே. ஆர். இராமசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது மானிய விலையில் வழங்கக்கூடிய நெல் விதைகள் முளைப்புத் திறன் அற்றவையாக பெரும்பாலும் இருக்கின்றன. அதை மாற்றி விவசாயிகளுக்கு நல்ல விதைகள் கொடுப்பதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன குறைபாடுகள் அரசினுடைய கவனத்திற்கு இன்று வரை வர வில்லை.

திரு. கே. ஏ. செங்கோட்டையன்: பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகின்ற போது தேவை யான அளவிற்கு வீரிய விதைகள் 2 ஆண்டு, 3 ஆண்டு காலத்தில் அத்தனை பேருக்கும் பூர்த்தி செய்யப்படுகிறது என்று குறிப்பிட்டார்கள் அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிடுகின்ற நேரத்தில் நெற் பயிர்கள் நாற்று விடுகின்ற நேரத்தில் அவர்களுக் குத் தேவையான விதை நெற்களைத் தராத காரணத்தால் பல் வேறு தனியாரிடத்திலே வாங்க வேண்டிய ஒரு ஆக்கட்டான சூழ் நிலை இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் கருத்திலே கொண்டு அணைகளிலிருந்து தண்ணீர் திறந்து விடுகின்ற போது அந்தந்தப் பகுதியில் எந்த வீரிய வித்துக்கள் தரப்பட வேண்டுமோ அந்த நெற்களைத் தருவதற்கு உடனடியாக அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை தெரிவிக்க விரும்புகிறேன்.

9-30 மணி

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீரிய வித்துக்கள் விவசாயி களுக்கு வழங்குவதற்காக நம்முடைய அரசு பண்ணைகளில் உற் பத்திச்செய்கிறோம். பெரிய இரகங்களான அந்த வித்துக்களைக் கொண்டு சான்றிதழ் அளிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நாம் விதை களை வழங்கி அவர்கள் உற்பத்தி செய்த பிறகு அவர்களிடமிருந்து கொள்முதல் செய்து நம்முடைய தமிழ்நாட்டில் இருக்கிற 780 விவசாயக் கிடங்குகள் மூலம் ஓரளவுக்குத்தான் நம்மால் கொடுக்க முடிகிறது. முழுமையாக விவசாயிகளின் தேவையைப் பூர்த்தி செய்ய முடியவில்லை. மாண்புமிகு உறுப்பினர் சொன்ன அந்தக் கருத்தின் அடிப்படையில் தான் இந்த ஆண்டு மேலும் 6 சதவீதம் கூடுதலாக விதைகள் உற்பத்தி செய்ய வேண்டும் என்று திட்டம் இடப்பட்டிருக்கிறது.

திரு. வ. முல்லைவேந்தன்: மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, கடந்த காலத்தில் கலைஞர் முதலமைச்சராக இருந்தபோது புதிய புதிய விவசாயத் துறையிலே நெல், பயிர் வகைகள் எல்லாம் கண்டுபிடிக்கப்பட்டு பல பெயர்கள் சூட்டப் பட்டன. அப்போது அன்னை அஞ்சுகம் பச்சைப் பயிறு என்று ஒரு வகைக்கு பெயர் சூட்டப்பட்டு இருந்தது. அது கடந்த கால ஆட்சியில் நீக்கப்பட்டது. மீண்டும் அந்த அஞ்சுகம் பச் சைப் பயிறு என்ற பெயர் கொண்டு வரப்படுமா என அறிய விரும்புகிறேன்.

1990 மே 11]

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழினத் தலைவர் முதலமைச்சர் அவர்களுடைய அன்னை, நமக்கெல்லாம் அன்னை. அவருடைய பெயரை நீக்கி இருந்தாலும் தமிழர்களுடைய நெஞ்சம் எல்லாம் நீக்கமற இடம் பெற்று இருக்கிறார்கள். ஆகவே, அதைப்பற்றி நாம் முயற்சி செய்ய வேண்டிய அவசியம் இல்லை.

திரு. ரா. சொக்கர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வீரிய வித்துக்களுக்காக சான்றிதழ்கள் வழங்கும்போது பொதுவாக ஜெர்மினேஷன் டெஸ்டு மட்டும் தான் பார்க்கிறார்கள். எத்தனை சதவீதம் அந்த பயிர் முளைக்கும் என்று பார்த்தால் சாதாரணமாக எந்த விதையும் 85 சதவீதம், 90 சதவீதம் அளவுக்கு முளைக்கும். ஆனால் அதிலே இருந்து முளைத்து வரக்கூடிய பயிர்கள் நல்ல மகசூலைத் தர வேண்டும். அந்தப் பயிர்கள் தரமான பயிர்களாக இருக்க வேண்டும் என்று விஞ்ஞான ரீதியாக விதைப் பண்ணைகளில் நல்ல முறையில்அந்தவீரிய விதைகளை உற்பத்தி செய்யவேண்டும். ஆனால் அந்த அளவுக்கு இது வரையில் உற்பத்தி செய்யவில்லை. குறிப்பாகப் பருத்தி விதையில் அந்த முயற்சி மேற்கொள்ளப் படுமானால் தமிழ்நாட்டில் பருத்தி மகசூல் அதிகமாக வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்ற அடிப்படையில் அதனை விஞ்ஞான முறையில் விதைப் பண்ணைகளில் உற்பத்தி செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய ரக விளைச்சலை அதிகரிக்க விதைகளை விஞ்ஞான ரீதியிலே தான் நம்முடைய வேளாண்மைப் பல்கலைக் கழகம் கண்டுபிடித்து அதன் பின்னர் தான் அப்படிப்பட்ட வீரிய விதைகளை உற்பத்திச் செய்து உற்பத்தியை அதிகரித்து நம்முடைய வேளாண்மைத் துறையிலே ஈடுபட்டு இருக்கிற விவசாயப் பெருங்குடி மக்களுக்கு வழங்குகிறோம். போதிய அளவுக்கு நம்மால் கொடுக்க முடியவில்லை என்பது உண்மை. அரசு அதற்காக நடவடிக்கை எடுக்கும்.

கலப்பு மணத் தம்பதிகளுக்கு முன்னுரிமை

* 2115—திரு. கே. ஆர். ஜி. தனபாலன் :

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் மற்றும் குடிசைப் பகுதி மாற்று வாரியம் ஆகியவைகளால் கட்டப்படும் வீடுகளை ஒதுக்கீடு செய்வதில் கலப்பு மணத் தம்பதிகளுக்கு முன்னுரிமை வழங்கப் படுமா ?